**<u>Chapter XXIII code of Criminal procedure</u>**
**<u>DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR</u>**
**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| **Calender** | : | |
| **Miscellaneous** | : | **CC.No.1105/2024** |
| **Preliminary Register** | : | |
| **Police Station** | : | **Neelangarai PS** |
| **Deposition of witness for** | : | **LW3/PW3** |
| | : | |
| **Name** | : | **ஸ்ரீராம்** |
| | : | |
| | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.05.2026.**

**(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது நாகப்பட்டினத்தில் வசித்து வருகிறேன். அங்கு விவசாயம் செய்து வருகிறேன். நான் இந்தியா நிறுவனத்தின் 25 ஆண்டுகளாக பணிபுரிந்து கடந்த 2021 ஆம் ஆண்டு பணியில் இருந்து ஓய்வு பெற்று விட்டேன். அதன் பின்பு விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரி ஐயப்பனை எனக்கு ஆறு வருடங்களாக தெரியும். அவர்

என்னிடம் மூன்று கார்கள் வாங்கியுள்ளார். அதனால் தெரியும். இந்த வழக்கின் புகார்தாரர் கோபிநாத் என்பவர் எனக்கு தெரியும். அவர் என்னுடன் பணி புரிந்தவர். கடந்த 2018 ஆம் ஆண்டு கோபிநாத்தின் மனைவிக்கு ஸ்டாப்நர் அரசாங்கம் வேலை வாங்கி தருவதாக கோபிநாத் ஐயப்பனின் டிரைவரிடம் ரூபாய் 2 லட்சம் நந்தனத்தில் உள்ள எங்களது காஸ் இந்தியா ஷோரூம் இல் கொடுத்தார். அதை நான் புகைப்படம் எடுத்து வைத்துள்ளேன். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் காவல் நிலையத்தில் போலீஸ் விசாரணையின் பொழுது குறிப்பிட்ட சங்கதிகளும் நான் தற்பொழுது நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளும் இரண்டும் ஒன்றுதான் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளது போல் கோபிநாத்தின் மனைவிக்கு வேலை வாங்கித் தருவது சம்பந்தமாக அவர்களுக்குள் என்னென்ன பரிவர்த்தனைகள் நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கோபிநாத்தின் மனைவிக்கு வேலை வாங்கித் தருவது சம்பந்தமாக எதிரி கோபிநாத்தின் மனைவியிடம் என் முன்னிலையில் இது சம்பந்தமாக பேசினார்களா என்றால் இல்லை. இந்த பரிவர்த்தனைகள் அனைத்தும் எங்களது கார்ஸ் ஷோரூமில் கார் வாங்குவதற்காக கொடுக்கப்பட்ட பணம் தான் புகார்தாரர் என்னுடன் பணிபுரிவதால் அவருக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

**Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நடுவர்**
**சோழிங்கநல்லூர்**

Crl.Misc.39

**<u>Chapter XXIII code of Criminal procedure</u>**
**<u>DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR</u>**
**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| **Calender** | : | |
| **Miscellaneous** | : | **CC.No.1105/2024** |
| **Preliminary Register** | : | |
| **Police Station** | : | **Neelangarai PS** |
| **Deposition of witness for** | : | **LW4/PW4** |
| | : | |
| **Name** | : | **சபரிநாத்** |
| | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.05.2026.**

**(எதிரி  ஆஜர்,  எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

நான் சோழிங்கநல்லூரில் வசித்து வருகிறேன். நான்  கார்ஸ் இந்தியா நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் கோபிநாத் என்னுடன் பணிபுரிபவர். இந்த வழக்கின் எதிரி ஐயப்பனை எனக்கு தெரியாது .அவருடைய கார் ஓட்டுநர் தான் தெரியும். கோபிநாத்தின் மனைவி மேகலாவுக்கு அரசு வேலை வாங்குவது சம்பந்தமாக பணம் கேட்கிறார்கள் என்று எங்களிடம் பேசிக் கொண்டிருந்தார். அது சம்பந்தமாக 2018 ஆம் ஆண்டு தேதி மற்றும் மாதம் நியாபகம் இல்லை. எங்கள் அலுவலகத்தில் ஐயப்பனின்

ஓட்டுநர் ஒருவர் கோபிநாதிடம் ரூபாய் இரண்டு லட்சம் பணம் வாங்கி சென்றார். கோபிநாத் கொடுத்த தொகையில் மூன்று லட்சம் மீதி பணம் தர வேண்டும் என்ற விவரம் மட்டும் தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கின் சாட்சிகள் கோபிநாத், ஸ்ரீராம் நான் ஆகியோர்கள் ஒரே நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் தான் கோபிநாத்தை எனக்கு எட்டு ஆண்டுகளாக தெரியும். எதிரியின் கார் ஓட்டுனர் ரூபாய் 2 லட்சம் வாங்கி சென்ற பொழுது நானும் கோபிநாத் ஸ்ரீராம் சாரும் இருந்தோம். ரூபாய் இரண்டு லட்சம் கொடுத்தார்கள். அதில் 500 ரூபாய் நோட்டுகள், ஆயிரம் ரூபாய் நோட்டுகள், 200 ரூபாய் நோட்டுகள் இருந்தன. எத்தனை ரூபாய் நோட்டுகள் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பணத்தை வெளிப்படையாக தான் கொடுத்தார்கள், அதன் பின்பு தான் அதை கவரில் போட்டுக் கொடுத்தார். எங்களது அலுவலகத்தில் சிசிடிவி உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் புகார்தாரர் எனது நண்பர் என்ற காரணத்தினால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

**Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நடுவர்**
**சோழிங்கநல்லூர்**